. 4 பக்கங்கள் . விலை ரூ. 5




# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936




www.dhinatamil.com — மாற்றத்தின் ஆரம்பம் — dhinatamil
• பதிப்பு : நாகர்கோவில் • 05.04.2026 • மலர் 04 • இதழ்: 94
• Edition : Nagercoil • 05.04.2026 • Vol : 04 • Issue : 94 • Page : 4 • Rs. 5/-

# மதசார்பற்ற கூட்டணி வேட்பாளர்களை வெற்றி பெற செய்யுங்கள்

## நாகர்கோவில் பொதுக்கூட்டத்தில் தமிழக முதல்வர் பேச்சு





நாகர்கோவில், ஏப்.5

திமுக தலைவரும், தமிழ்நாடு முதல் அமைச்சருமான மு க ஸ்டாலின் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து நாகர்கோவில் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் வேட்பாளர்களை அறிமுகப்படுத்தி பேசினார். அப்போது அவர் பேசியதாவது:

உலகம் முழுவதிலும் இருந்து மக்கள் சூரிய உதயத்தை பார்க்க வரக்கூடிய மாவட்டம்தான் இந்த குமரி மாவட்டம். இந்த மாவட்டத்தில் உதயசூரியன் ஆட்சி உதிக்க வேண்டும் என்று ஆதரவு கேட்டு உங்களையெல்லாம் நான் பார்க்க வந்திருக்கிறேன்.

2026 சட்டமன்றத் தேர்தல்ல திராவிட முன்னேற்றக் கழகத்தை 7 வது முறையா ஆட்சியில் அமர்த்த வேண்டும் என்றால் குமரி மாவட்டத்துல இருக்கக்கூடிய எல்லா தொகுதிகளிலும் நம்ம மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்கள் வெற்றி பெற்றாகணும். அதற்காக நம்முடைய அந்த வெற்றி, அந்த வெற்றிக்குரிய வேட்பாளர்களை இப்போ உங்க முன்னாடி நான் அறிமுகப்படுத்தப் போறேன்.

கன்னியாகுமரி சட்ட மன்றத் தொகுதி வேட்பாளர், மாவட்டச் செயலாளர் ஆர். மகேஷ் திமுக சார்பில் போட்டியிடுகிறார்.

நாகர்கோவில் சட்ட மன்றத் தொகுதி திமுக வேட்பாளராக சட்ட மன்ற உறுப்பினராக 2 முறையும், மாநிலங்களவை உறுப்பினராக ஒரு முறையும் மக்கள் பணியாற்றிய ஆஸ்டின்,

கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் ராகுல் காந்தி அறிமுகப்படுத்திய வழக்கறிஞர் ராஜேஷ்குமார்,

குளச்சல் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தாரகை கத்பர்ட்,

பத்மநாபபுரம் சட்ட மன்றத் தொகுதி வேட்பாளர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஆர். செல்வசுவாமி, விளவங்கோடு சட்டமன்றத் தொகுதி வேட்பாளர், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த இளம் தலைவர் ராகுல் காந்தி அறிமுகப்படுத்திய டி.டி. பிரவீன் ஆகிய வேட்பாளர்களை வெற்றிபெறசெய்யுங்கள்.

குமரி மாவட்டத்திற்கு நாம் பல்வேறு திட்டங்களை உருவாக்கி, பல்வேறு சாதனைகளை நாம் செய்து காட்டியிருக்கிறோம்.

குமரியில் மீனவர் நலத் திட்டங்கள் ஏராளம் செய்யப்பட்டுள்ளது. இனி மீன்பிடித் தடைக்காலச் சிறப்பு நிவாரணத் தொகை மாதம் 8000 அல்ல, 12,000 ரூபாய் வழங்கப்படும். இனி மீன்பிடி குறைவுகால நிவாரணத் தொகை மாதம் 6000 அல்ல, 9000 ரூபாயாக வழங்கப்படும். தமிழ்நாடு மீனவர், மீனவ மகளிர் சேமிப்பு நிவாரணத் திட்டம் மூலம் கடந்த அஞ்சு வருஷத்துல 117 ஆயிரம் கோடியே 94 லட்சம் ரூபாய் சேமிப்பு நிவாரணம் வழங்கப்பட்டிருக்கு. இனி மீனவர் நல வாரிய உறுப்பினர் சேர்க்கைக்கான வயது வரம்பு 65லிருந்து 70 வயதாக உயர்த்தப்படும்.

மீனவர்நல வாரியத்துல உறுப்பினராக இருப்போருக்கு இப்போ வழங்கப்பட்டு வரக்கூடிய நலத் திட்டங்களோடு கூடுதலாக, அவங்களுடைய 70 வயது முதல் 75 வயது வரை மாதந்தோறும் ஓய்வூதியம் வழங்கப்படும்னு மகிழ்ச்சியோடு நான் தெரிவிச்சுக்கிறேன்.

இப்படி மீனவர்களின் உண்மையான நண்பனா, உற்ற தோழனா செயல்பட்டு வருது உங்கள் திராவிட மாடல் அரசு.

ஆனா வெளியுறவுக் கொள்கையை கையில வச்சிருக்கக்கூடிய ஒன்றிய பாஜக அரசு, கடல் கடந்து மீன்பிடிக்கப் போகக்கூடிய நம்ம மீனவர்களைக் காக்கத் தவறிடுச்சு. தவறியது மட்டுமல்ல, வெளியுறவுக் கொள்கையில தோல்வியும் அடைஞ்சிருக்கு. சிறிய அண்டை நாடுகள் கிட்ட கூட இந்தியாவுக்குச் செல்வாக்கில்லாத நிலையை பிரதமர் மோடி உருவாக்கியிருக்கிறார்.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்துல பிரதமர் மோடி என்ன சொன்னார்? மன்மோகன் சிங் என்ற பலவீனமான பிரதமர் ஆளுகிற காரணத்தால்தான் நம்ம மீனவர்கள் மீது தாக்குதல் நடக்குது, பலமான பிரதமராக நான் வந்தால் நடக்காது அப்படின்னு பேசினார்.

மதுரை எய்ம்ஸ் , கோவை, மதுரை மெட்ரோ ரயில், ஓசூர் விமான நிலையம், பேரிடர் நிவாரண நிதி, பள்ளிக் கல்வி நிதி, கீழடி ஆய்வறிக்கை, தொகுதி மறுவரையறையில உரிய நியாயம், நிதிப் பகிர்வுல தமிழ்நாட்டிற்கு உரிய பங்கு, தமிழ்நாட்டிற்கு மறுக்கப்படக்கூடிய புதிய ரயில்வே திட்டங்கள். இப்படி தமிழ்நாடு சார்பில் பிரதமர் மோடி கேட்க ஏராளமான கேள்விகள் இருக்கு.

இப்போ புதுசா ஒரு பிரச்சனை கிளம்பியிருக்கு. என்ன தெரியுமா? சிறுபான்மையின மக்கள், சிறுபான்மையின மக்களைக் குறிப்பா கிறிஸ்தவத் தொண்டு நிறுவனங்களைக் குறி வச்சு அந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கு. என்னன்னா, அதாவது வெளிநாட்டு நிதி பங்களிப்பு திருத்த மசோதா. இதுக்காகவும் தமிழ்நாட்டுல இந்த ஸ்டாலின்தான் முதல் குரல் கொடுத்திருக்கிறேன்.

இந்தியா முழுக்க ஆயிரக்கணக்கான கிறிஸ்தவக் கல்வி, மருத்துவ அமைப்புகள் இயங்கி வருது. அதெல்லாம் இல்லாமப் போனா, அரசால அவங்க பண்ணிட்டு வர்ற சேவையை ஓரளவிலாவது நிரப்ப முடியாது என்பதையும் என்னுடைய கடிதத்துல அதை நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன். இந்தத் தாக்குதல் ஒரு மதத்திற்கு எதிரானது மட்டுமல்ல, இது மனிதகுலத்திற்கே எதிரானது.

அதிமுக என்ற கட்சி பாஜகவினுடைய கொத்தடிமைக் கூட்டமா மாறிப் போயிருக்கு. பாஜகவுக்கு எதிராகக் குரல் கொடுக்க அதிமுகவுக்கு துணிச்சலில்லை. ஆனா திமுக வாக்குக் கொடுத்தால் அதை எப்படியாவது செஞ்சு முடிப்போம். அப்படி இந்தத் தேர்தல் களத்துல இறங்கியிருக்கக்கூடிய சூப்பர் ஸ்டார்தான் திமுக தேர்தல் அறிக்கை. ஒரு கோடியே 31 லட்சம் சகோதரிகள் பெற்று வரும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை இனி மாசம் 2000 ரூபாயாக வழங்கப்படும். புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன் திட்டத்தில் மாணவர்களுக்கு உதவித் தொகை இனி 1000த்திலிருந்து மாசத்துக்கு 1500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

முதியோர், மாற்றுத்திறனாளிகள், ஆதரவற்ற பெண்கள் என எல்லா உதவித் தொகைகளும் டபுள் மடங்காக உயர்த்தி வழங்கப்படும்.

நெல் கொள்முதல் விலை குவிண்டால் ஒன்றுக்கு 3500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். கரும்பு கொள்முதல் விலை டன் ஒன்றுக்கு 4500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

பால் கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு 5 ரூபாய் உயர்த்தி வழங்கப்படும். மகளிர் சுயஉதவிக் குழு சகோதரிகளுக்கு இனி எந்த ஷ்யூரிட்டியும் இல்லாமல், கேரண்டி எல்லாம் இல்லாமல் 5 லட்சம் ரூபாய் வரை மானியத்தோடு கடன் உதவி வழங்கப்படும். குமரி மாவட்டம் இயற்கை பேரிடர்களால் அதிகம் பாதிக்கப்படுகிற மாவட்டம். இனி பேரிடர் கால இழப்பீடுகளா இறைவைப் பாசனப் பயிர்கள் மற்றும் நெல் பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 25,000 ரூபாய், நீண்டகாலப்பயிர்களுக்கு 27,000 ரூபாய், மானாவாரிப் பயிர்களுக்கு 12,000 ரூபாய் என உயர்த்தி வழங்கப்படும்.

தமிழ்நாட்டை எப்படிப்பட்ட ஆபத்து சூழ்ந்திருக்குன்னு நான் சொல்லியிருக்கிறேன். இதிலிருந்து தமிழ்நாட்டைக் காப்பாத்தணும்னா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தொடர்ந்தாகணும். தமிழ்நாடுஅணியா, டெல்லி அணியா? இது தர்ம யுத்தம். அரசியல் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியை ஆதரிக்க நான் கேட்டுக்கிறேன். என பேசினார்.

# திமுக மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடாது

## பியூஷ் கோயல் பேட்டி



சென்னை, ஏப். 5

சென்னை தி.நகரில் உள்ள பாஜகஅலுவலகத்தில்பாஜக தேர்தல் பொறுப்பாளர் பியூஷ் கோயல் தமிழக நிதி நிலை குறித்த வெள்ளை அறிக்கையை வெளியிட்டார். அதனை தொடர்ந்து அவர் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:

தமிழகத்தில் டபுள் என்ஜின் அரசை கொண்டுவர வேண்டும். தமிழகத்திற்கு ஜிஎஸ்டி நிதியாக மத்திய அரசு ரூ.80,000 கோடி வழங்கியுள்ளது. தமிழக அரசு வட்டியாக மட்டும் ரூ.76,000 கோடியை இந்தாண்டு செலுத்தியுள்ளது. நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பது முறைகேடு தான். தமிழ்நாடு திவால் ஆகும் நிலைக்கு சென்று கொண்டிருக்கிறது

எந்த திட்டங்களும் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படப்படவில்லை. திமுக ஊழல் அரசியல் செய்கிறது.ரூ.12 லட்சம் கோடி தொழில் முதலீடு என்றார்கள். ஆனால் எதுவும் வரவில்லை. மாநில அரசுகளிலேயே பொறுப்பற்ற அரசாக தமிழ்நாடு இருக்கிறது.

சிறு குறு நிறுவனங்கள் முடக்கப்பட்டு 5 லட்சம் வேலைவாய்ப்புகள் பாதிக்கப்பட்டுள்ளன.வெளிநாட்டு முதலீடுகள் வந்ததாககூறுகிறார்கள். ஆனால் வேலைவாய்ப்புகள் எங்கே போயின?

தமிழ்நாட்டில் முதலீடு செய்ய நிறுவனங்கள் ஏன் தயங்குகின்றன? அரசின் வருவாய் எல்லாம் கடனை அடைக்கவே சரியாக உள்ளது. மத்திய அரசு கொடுத்த பணம் எங்கே போனது?வெளிநாட்டு முதலீடுகள் வந்ததாக கூறுகிறார்கள். ஆனால் வேலைவாய்ப்புகள் எங்கே போயின? ஜிஎஸ்டி மூலம் தமிழகத்திற்கு கிடைக்கும் வருவாய் எங்கே செல்கிறது? தமிழக முதல்அமைச்சரிடம் ஒரு கேள்வி கேட்டுகிறேன். பணம் எங்கே சென்றது?

தமிழ்நாட்டின் தொழில்துறை சிறப்பாக இருக்கிறது. நிர்வாக காரணத்தால் தமிழ்நாடு பாதிக்கப்பட்டுள்ளது.

மது விற்பனை, அரசு ஒப்பந்த பணிகள் அனைத்திலும்கமிஷன்.எந்ததிட்டங்களும் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படவில்லை. திமுக ஊழல் அரசியல் செய்கிறது. டி.ஆர்.பாலு, ப.சிதம்பரம், தயாநிதி மாறன் ஆகியோர் ஊழல் வழக்கை எதிர்கொள்கின்றனர். ஊழல் செய்யும் திமுக தமிழ்நாட்டில் மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடாது. மோடி வழிகாட்டுதலுடன் பழனிசாமி நல்லாட்சி வரும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# தெலுங்கில் பேசி வாக்கு சேகரித்த அ.தி.மு.க. வேட்பாளர் அம்மன் அர்ஜுனன்




கோவை, ஏப்.5

தமிழக சட்டமன்ற தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது. தி.மு.க., அ.தி.மு.க., த.வெ.க., நாம் தமிழர் உள்ளிட்ட கட்சிகள், தங்களது வேட்பாளர்களை அறிவித்து பிரசாரத்தை தொடங்கி உள்ளன. தி.மு.க., அ.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகளின் வேட்பாளர்களும் மனு தாக்கல் செய்து விட்டு மக்களை சந்தித்து வாக்கு சேகரிக்க தொடங்கிவிட்டனர்.

அந்த வகையில், கோவை தெற்கு தொகுதியில் போட்டியிடும் அ.தி.மு.க. வேட்பாளர் அம்மன் அர்ஜூனன் பூமார்கெட் பகுதி மக்களிடம் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது மக்கள் தங்கள் குறைகளை அவரிடம் பட்டியலிட்டனர். இதில் குறிப்பாக அந்த பகுதியை சேர்ந்த ஒருவர் சாலைகள் முழுவதும் சேதமடைந்த நிலையில் உள்ளதாகவும், சாக்கடை நிறைந்து துர்நாற்றம் வீசுவதாகவும் தெலுங்கு மொழியில் குறைகளை தெரிவித்தார்.

அவர் கூறிய குறைகளை பொறுமையாக கேட்டறிந்த அம்மன் அர்ஜூனன், தெலுங்கு மொழியிலேயே பேசி குறைகளுக்கு நிச்சயம் தீர்வு காணப்படும் என உறுதியளித்தார். மேலும் தேர்தல் முடிந்ததும் அனைத்து பிரச்சனைகளும் சரிசெய்து தரப்படும் என்று கூறி ஆதரவு திரட்டினார். மேலும் அ.தி.மு.க.வின் முக்கிய நிர்வாகிகள் உட்பட தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகளும், தொண்டர்களும் திரளாக கலந்துகொண்டு வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.






# ஸ்டாலின், உதயநிதி, கனிமொழி ஆகியோர் பொய் பிரசாரம் செய்கின்றனர்

## கோவை சத்யன் கடும் குற்றச்சாட்டு



சென்னை, ஏப். 5

மத்திய அரசு வரவிருக்கும் தேசிய மக்கள்தொகை கணக்கெடுப்பில் சாதி வாரியான எண்ணிக்கையையும் சேர்க்க அதிகாரப்பூர்வமாக ஒப்புதல் அளித்துள்ளது. மேலும் 1931ம் ஆண்டிற்கு பிறகு இப்போதுதான் முதல்முறையாக நாடு தழுவிய அளவில் முழுமையான சாதி வாரி கணக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது.

சாதி அடிப்படையிலான மக்கள்தொகை கணக்கெடுப்பு குறித்து, அதிமுக செய்தி தொடர்பாளர்கோவைசத்யன்கூறுகையில், ஒரு மாநில அரசாங்கம் தனது நலத்திட்டங்களுக்காகவோ அல்லது ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் நிலையை அறியவோ சாதி வாரியான ஆய்வு நடத்த சட்டப்படி இடம் இருக்கிறது. ஆனால், அதிகாரப்பூர்வமான மக்கள் தொகை கணக்கெடுப்பு என்பது மத்திய அரசுக்கு மட்டுமே அதிகாரம் உள்ளதாக கூறினார்.

மேலும் பீகார் போன்ற பிற மாநிலங்கள் ஏற்கனவே சாதி அடிப்படையிலான மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்தி விட்டதாகவும்.ஆனால் கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழக மக்களுக்கு காட்டுவதற்கு திமுகவிடம் எந்த சாதனையும் இல்லை என கூறினார். மேலும் முதல்வர் மு.க. ஸ்டாலின், தனது மகன் உதயநிதி மற்றும் தங்கை கனிமொழி ஆகியோர் வீதி வீதியாக சென்று பொய் பிரச்சாரம் செய்வதாகவும் அவர் கடுமையாக விமர்சித்துள்ளார்.

# தேர்தல் நேரத்தில் நாடாளுமன்ற கூட்டத்தொடரை கூட்ட வேண்டிய அவசியம் என்ன?

## ஜோதிமணி எம்.பி. கேள்வி

சென்னை, ஏப். 5

இறுதிக்கட்ட பிரசாரம் மிகத்தீவிரமாக நடந்து கொண்டிருக்கும் நேரத்தில் நாடாளுமன்ற கூட்டத்தொடரை கூட்ட வேண்டிய அவசியம் என்ன என்று காங்கிரஸ் எம்.பி. ஜோதிமணி கேள்வி எழுப்பியுள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

நாடாளுமன்ற கூட்டத்தொடரை வரும் ஏப்ரல் 16, 17 தேதிகளில் மோடி அரசு கூட்டியிருக்கிறது. தமிழ்நாடு,மேற்கு வங்கம் ஆகிய இரண்டு முக்கியமான மாநிலங்களில், குறிப்பாக எதிர்க்கட்சிகள் ஆளுகிற மாநிலங்களில் இறுதிக்கட்ட பிரசாரம் மிகத்தீவிரமாக நடந்து கொண்டிருக்கும் நேரத்தில் நாடாளுமன்ற கூட்டத்தொடரை இவ்வளவு அவசரமாக கூட்ட வேண்டிய அவசியம் என்ன? ஏப்ரல் 23ம் தேதி வாக்குப்பதிவு முடிவடைந்த பிறகு நாடாளுமன்றத்தை கூட்டமுடியாதா?

நேர் வழியில் மக்களைச் சந்தித்து அவர்களின் ஆதரவைப் பெற்று தேர்தலில் வெல்ல முடியாத பாஜக இதுபோல் குறுக்கு வழியில் பிரசாரத்தை முடக்க வேண்டும் என்று நினைப்பதும்,அதற்காக மதிப்பு மிகுந்த நாடளுமன்றத்தைப் பயன்படுத்த நினைப்பதும் அவமானகரமானது.

மகளிர் இட ஒதுக்கீடு மசோவை நாங்கள் வரவேற்கிறோம். 30 ஆண்டுகளுக்கு முன்பே உள்ளாட்சி அமைப்புகளில் மகளிர் இட ஒதுக்கீட்டை அமல்படுத்தி வரலாறு படைத்த கட்சி காங்கிரஸ் கட்சி. ஆனால் மகளிர் இட ஒதுக்கீட்டின் பெயரால் தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களின் நாடாளுமன்ற தொகுதிகளைக் குறைந்த அளவில் அதிகரித்து, உத்திரப்பிரதேசம் போன்ற வடமாநிலங்களின் நாடாளுமன்ற தொகுதிகளை மிக அதிக அளவில் அதிகரிப்பதை நாங்கள் ஏற்க முடியாது.

தென் மாநிலங்களில் வெற்றிபெறாமலே ஒரு கட்சி, மத்திய அரசில் ஆட்சி அமைக்க முடியும். இதனால் அதிக அளவில் வரிகட்டுகிற தென்மாநிலங்களுக்கு முக்கியமான பிரச்சினைகளில் முடிவெடுக்கிற அதிகாரம் இல்லாமல் போகும். ஆகவே இதுகுறித்து முதலில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி விரிவாக விவாதிக்க வேண்டும். அதில் ஒத்தகருத்து ஏற்பட்டால் மட்டுமே நாடாளுமன்றத்தில் மசோதா தாக்கல் செய்யப்பட வேண்டும்.

உடனடியாக தேர்தல் நேரத்தில் கூட்டப்பட்டிருக்கிற நாடாளுமன்ற கூட்ட த்தொடரை மோடி அரசு ரத்து செய்ய வேண்டும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

தின தமிழ்

நிருபர்கள் தேவை

வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக

தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை

தகுதிகள்

குற்றவழக்குகள் இருக்கக் கூடாது. முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்

மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்

99944 66200 – 70102 64701

கோவை

# அரசு மருத்துவமனைக்கு ஏர்கூலர் வழங்கிய ஆகாஷ் லயன்ஸ் சங்கம் 3242 சி



கோவை மார்ச் 5

ஆகாஷ் லயன்ஸ் சங்கம் 3242 சி சார்பில் சங்கத்தின் தலைவர் லயன் சசிகுமார் தலைமையில் செயலாளர் மணிகண்டன் பொருளாளர் குணசேகரன் முன்னாள் தலைவர் முத்துசாமி முன்னிலையில் கோவை அரசு மருத்துவமனை தலைமை செவிலியர் கண்காணிப்பாளர்கள் ப்ரீத்தா ரங்கநாயகி ஜானகி சுதா இவர்களிடம் பன்னாட்டு லயன்ஸ் இயக்கம் 3242 சி மாவட்டத்தின் ஜி எல் டி ஒருங்கிணைப்பாளர் லயன் பாஸ்கர் ஜி எஸ் டி ஒருங்கிணைப்பாளர் லயன் செந்தில்குமார் இணைந்து ஏர் கூலர் வழங்கினார்கள். உடன் லயன் ஜெயராம், லயன் பிரபு ராம், சிவில் இன்ஜினியர் மணிகண்டன்,ஜெயபிரகாஷ் அரசு மருத்துவமனை செவிலியர் கண்காணிப்பாளர்கள் ராதாமணி தேன்மொழி சுகந்தி குரூஸ் மேரி அமுதவல்லி பெரியநாயகி அமுதரசு முருகப்பெருமாள் ஆகியோர் உடன் இருந்தனர்.

திருப்பூரில்

# பகுஜன் சமாஜ் கட்சியில் வேட்பு மனு தாக்கல் செய்த வேட்பாளர்



திருப்பூர்: ஏப்05

(பகுஜன் சமாஜ்கட்சி) ஒரு இந்திய அரசியல் கட்சியாகும். இது கான்ஷிராம் என்பவரால் ஏப்ரல் 1984இல் தோற்றுவிக்கப்பட்டது. இது தலித்துகள் எனப்படும் தாழ்த்தப்பட்டோரை பிரதிநிதி ப்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்ட கட்சியாகும். இதன் சின்னம் யானை. 2001இல் கன்ஷிராம் தன்னுடைய அரசியல் வாரிசாக மாயாவதியை அறிவித்தார்.இந்திய தேசிய கட்சி பகுஜன்சமாஜ் கட்சியின் திருப்பூர் தெற்கு தொகுதி வேட்பாளராக (செஞ்சோலை சேகர் ) என்கின்ற ரங்கசாமி திருப்பூர் மாநகராட்சியில் வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு மாநிலத் தலைவர் உச்ச நீதிமன்ற வழக்கறிஞர் ஆனந்தன். மேற்கு மண்டல ஒருங்கிணைப்பாளர் ஈஸ்வரன். திருப்பூர் மாவட்ட தலைவர். விக்டர்

மனோவ ஆலோசனையின் படி மாநகராட்சி ஆணையாளர் அமித் அவர்களிடம்வேட்பு மனு தாக்கல் செய்தார்.

கலந்து கொண்டனர்.

சங்குதுறை கடற்கரையில்

# மாணவ, மாணவியர்களின் தேர்தல் விழிப்புணர்வு



நாகர்கோவில், ஏப்.5

சங்குதுறை கடற்கரையில் மகளிர் திட்டத்தின் சார்பில் தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சியாக பள்ளி கல்லூரி மாணவ மாணவியர்கள் சுய உதவி குழுக்கள் கலந்து கொண்ட கோலம் மற்றும் வண்ணம் பூசும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா நிகழ்ச்சியை நேரில் பார்வையிட்டு கூறியதாவது: கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சங்குதுறை கடற்கரையில் பள்ளி கல்லூரி மாணவ மாணவியர்கள் சுய உதவி குழுக்கள் கோலம் வரைந்தும் வண்ணம் பூசியும் தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும் பள்ளம்துறை பகுதியில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் அனைவரும் தேர்தல் நாளன்று மறவாது தங்களுடைய வாக்குக்களை பதிவு செய்ய வேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்டது. வாக்குரிமை பெற்ற அனைவரும் வரும் 23ம் தேதியன்று மறவாது வாக்குச்சாவடிக்கு சென்று வாக்களித்து நமது ஜனநாயக கடமையை ஆற்ற வேண்டும் என்பதோடு கன்னியாகுமரி மாவட்டம் 100 சதவீதம் வாக்களித்த மாவட்டமாக திகழ வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். என கூறினார். நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் தேர்தல் விழிப்புணர்வு கண்காணிப்பு அலுவலர், உதவி திட்ட இயக்குநர்கள், மகளிர் சுய உதவி குழுவினர், துறை அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி தமிழக வெற்றிக் கழகம் வேட்பாளர் மருத்துவர் திருப்பதி வருவாய் கோட்டாட்சியர்/ தேர்தல் அலுவலர் வரதராஜனிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார்.



கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் சட்டமன்ற தொகுதிக்கு திமுக வேட்பாளராக மாநகராட்சி மேயர் சத்யா, தேர்தல் அலுவலர் மற்றும் துணை ஆட்சியர் அக்ரிதி சேர்த்தியிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார். அருகில் திமுக மேற்கு மாவட்ட செயலாளர் ஒய் பிரகாஷ், மாவட்ட அவைதலைவர் யுவராஜ், தேர்தல் பொறுப்பாளர் பார் இளங்கோ, ஓசூர் ஒன்றிய செயலாளர் கஜேந்திரமூர்த்தி, ஆகியோர் உள்ளனர்.



திருப்பத்தூர் மாவட்டம் சட்டமன்றத் தொகுதியில் மூன்றாவது முறையாக திமுக சார்பில் போட்டியிட அ.நல்லதம்பி வேட்புமனு தாக்கல் செய்தார்.ஏற்கனவே இரண்டு முறை வெற்றி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. நகர கழக செயலாளர் எஸ். ராசேந்திரன் மற்றும் கூட்டணி கட்சியினர் உடன் இருந்தனர்.

கோவை சூலூர் தொகுதியில்

# தவெக சார்பில் சுகுமார் வேட்பு மனு தாக்கல்



கோவை ஏப்.5

கோவை சூலூர் சட்டமன்றத் தொகுதி தமிழக வெற்றிக் கழகம் வேட்பாளர் என்எம் சுகுமார் வட்டாட்சியர் தேர்தல் அலுவலரிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார்.பிறகு செய்தியாளர்களிடம் கூறுகையில் திமுக செந்தில் பாலாஜி கோவையில் தோல்வி அடைவது உறுதி மேலும் எங்கள் கட்சி உறுதியாக வெற்றி பெறும் என்று தெரிவித்தார்.உடன் தமிழக வெற்றிக்கழக நிர்வாகிகள் இருந்தனர்.

பெரியகுளம் சட்டமன்றத் தொகுதியில்

# அமமுக வேட்பாளர் கதிர்காமு வேட்புமனுவை தாக்கல் செய்தார்



பெரியகுளம், ஏப்.5

தேனி மாவட்டம் பெரியகுளம் சட்டமன்றத் தொகுதியில் (தனி) என்டிஏ கூட்டணி கட்சியில் உள்ள அம்மா மக்கள் முன்னேற்ற கழக வேட்பாளர் கதிர்காமு தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார் முன்னதாக காலேஜ் விளக்கு பகுதியில் இருந்து பெரியகுளம் கோட்டாட்சியர் அலுவலகம் வரை அதிமுக, பாஜக உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் என சுமார் 500க்கும் மேற்பட்டோர் மேளம் தாளங்கள் முழங்க கோஷ்டியை எழுப்பி ஊர்வலமாக வந்தனர் தொடர்ந்து அமமுக வேட்பாளர் கதிர்காமு உடன் கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஐந்து பேர் மட்டும் தேர்தல் அலுவலகத்தில் அனுமதிக்கப்பட்டனர் பின்னர் தேர்தல் நடத்தும் அலுவலர் ரஜத் பீடனிடம் வேட்பாளர் கதிர்காமு தனது வேட்பு மனுவை தாக்கல் செய்து உறுதிமொழி ஏற்றுக்கொண்டார் முன்னதாக வேட்பாளர் கதிர்காமு தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார்



மத சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி சார்பில் ஓட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் திமுக வேட்பாளர் ராமஜெயம் சட்டமன்றப் பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுவை ஓட்டப்பிடாரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்டாட்சியர் சுப்புலட்சுமியிடம் வேட்புமனு அளித்தனர். உடன் தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி மற்றும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

ஒட்டனந்தல் கிராமத்தில் முருகன் கோவில் வேலியில்

# 9 நாள் எலுமிச்சை பழம் ரூ.1,43000 ஏலம் போனது



விழுப்புரம், ஏப்.5

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் அருகே உள்ள ஒட்டனந்தல் கிராமத்தில் இரட்டைக் குன்றின் மீது பால சுப்பிரமணியர் வள்ளி தெய்வானை முருகன் கோவில் உள்ளது. கருவறையில் வேல் மட்டுமே உள்ள இந்த கோவிலில் பங்குனி உத்திர திருவிழா கடந்த 1ம் தேதி கொடி ஏற்றத்துடன் தொடங்கியது. பங்குனி உத்திர திருவிழாவை முன்னிட்டு நடத்தப்படும் உற்சவ காலங்களில் தினமும் வேலில் சொருகப்படும் 9 நாள் எலுமிச்சை பழங்களை இடும்பன் பூஜையில் வைத்து ஏலம் விடும் நிகழ்ச்சி இரவு நடைபெற்றது.

இந்த எலுமிச்சை பழத்தை சாப்பிட்டால் குழந்தை பாக்கியம் கிடைக்கும் எனவும், விரைவில் திருமணம் நடைபெறும் எனவும் நம்பப்படுகிறது. இதனால் ஏல நிகழ்ச்சியில் கலந்து கொள்ள பல மாவட்டங்களில் இருந்து 100 மேற்பட்டோர் வருகை தந்தனர். இடும்பன் பூஜைக்கு பிறகு கோயிலின் தலைமை பூசாரி ஆனி பதித்த காலணியில் நின்று ஏலத்தை தொடங்கினார். முதல் நாள் பழத்தை ஒட்டனந்தல் கிராமத்தை சேர்ந்த பவித்ரா வெங்கடேசன் தம்மதியர் ரூ.45,500க்கும், 2ம் நாள் பழத்தை பெரிய செவலை கிராமத்தை சேர்ந்த கோபால் பாக்கியலட்சுமி தம்மதியர் ரூ.15000க்கும், 3ம் நாள் பழத்தை பண்ருட்டி சரவணன்வித்தியா தம்மதியர் ரூ.16,000க்கும், 4 ம் நாள் பழத்தை ஒட்டனந்தல் கிராமத்தை சேர்ந்த சுந்தர்ராஜ் ஜீவா தம்மதியர் ரூ.14,500க்கும், 5ம் நாள் பழத்தை ஒட்டனந்தல் கிராமத்தை சேர்ந்த பரந்தாமன்லட்சுமி தம்மதியர் 16,000 க்கும், 6ம் நாள் பழத்தை இருவேல்பட்டு கிராமத்தை சேர்ந்த பிரகாஷ் பழனியம்மாள் தம்மதியர் ரூ.16,500க்கும், 7ம் நாள் பழத்தை தென்மங்கலம் சிவாவினுப்பிரியா தம்மதியர் 9,000க்கும், 8ம் நாள் பழத்தை பூசாரி பாளையம் கலா 5,000க்கும், 9 ம் நாள் பழத்தை கோட்டாலம்பக்கம் கிராமத்தை சேர்ந்த வெங்கடேசன் ரூ.5,500 ரூபாய்க்கும் ஏலம் எடுத்தனர் 9 நாள் பழங்கள் மொத்தம் ரூ.1,43000 ஒரு லட்சத்து நாற்பத்து முன்றாயிரத்திற்க்கு ஏலம் போனது. எலுமிச்சை பழத்தை ஏலம் எடுத்தவர்கள் உடலில் தண்ணீரை ஊற்றுக் கொண்டு பூசாரி முன்பு மண்டியிட்டு புடவையின் முந்தானையில்எலுமிச்சைபழத்தினைபெற்றுக்கொண்டனர், இறுதியாக இடும்பனுக்கு படைக்கப்பட்ட கருவாட்டு குழம்பு கலந்த சாதம் பிரசாதமாக அனைவருக்கும் வழங்கப்பட்டது. இந்த வினோத திருவிழாவில் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் கிராமங்களில் இருந்து 100க்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டு முருகனை வழிபட்டு சென்றனர்.

அஇபுதமக கட்சி சார்பில்

# சூலூர் தொகுதி வேட்பாளர் பாப்பா முத்துலட்சுமி வேட்பு மனு தாக்கல்



கோவை ஏப். 5

கோவை சூலூர் தொகுதியில் அகில இந்திய புரட்சித்தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வேட்பாளராக களம் இறங்கியுள்ள பாப்பா முத்துலட்சுமி சூலூர் தாலுகா அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் ஜெகநாதனிடம் வேட்பு மனுதாக்கல்செய்தார்.அப்போதுஅகிலஇந்தியபுரட்சித்தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகத்தின் கோவை மாவட்ட செயலாளர் வெங்கடேஷ் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பாப்பா முத்துலட்சுமி,அனைத்து மக்களுக்கும் நன்மை செய்யும் விதமாக சூலூர் தொகுதியை தேர்ந்தெடுத்துள்ளேன்.புரட்சித்தாய் சின்னமா ஆசியுடன் வேட்பாளர் நல்லபடியாக நிறைவு பெற்றது. தேர்தல் பரப்புரையை தொடங்கிவிட்டேன்.கிராமப்புற மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கும் விதமாக சின்னம்மா வழியில் தொடர்ந்து பணியாற்றுவோம்.சூலூர் தொகுதியை பெண்கள் பாதுகாப்பு கொண்ட தொகுதியாக உருவாக்கவும்,சின்னம்மா தலைமையில் ஆட்சி அமையவும் தொடர்ந்து பாடுபடுவோம் என தெரிவித்தார்.

மணப்பாறை

# மொபைல் பார்ப்பதை கண்டித்ததால் சிறுமி தற்கொலை

திருச்சி, ஏப். 5

மணப்பாறைப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த 17 வயது பிளஸ்சி முதலாம் ஆண்டு மாணவி ஒருவர், அடிக்கடி செல்போன் பயன்படுத்தியதால் பெற்றோர் கண்டித்ததால் மனமுடைந்து தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். இந்த துயரச் சம்பவம் மணப்பாறை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் நிகழ்ந்துள்ளது. தகவல் அறிந்த போலீசார் சிறுமியின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

திருச்சி

# விளக்கு ஏற்றிய போது ஆடையில் தீ பற்றி மூதாட்டி பலி

திருச்சி, ஏப். 5

திருச்சி கல்லுக்குழி பகுதியைச் சேர்ந்த 63 வயதான கோமளவல்லி என்பவர் வீட்டில் விளக்கு ஏற்றும்போது, அவரது ஆடையில் தீப்பற்றி உடல் முழுவதும் பரவியது. கணவர் மோகன் மற்றும் அக்கம் பக்கத்தினர் உதவியுடன் தீயை அணைத்து, அவரை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார். இது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி சார்பில் அம்மா மக்கள் முன்னேற்றக் கழக ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் R. சுந்தரராஜ் தனது வேட்புமனுவை ஓட்டப்பிடாரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் தாக்கல் செய்தார். இந்நிகழ்வில் அதிமுக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்P. மோகன், மாவட்ட இளம் பெண்கள் பாசறை செயலாளர் கவியரசு, கருங்குளம் வடக்கு மாவட்ட ஒன்றிய செயலாளர் L. இலட்சுமணப்பெருமாள், மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சியை சார்ந்த பல்வேறு முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

### வேப்பனஹள்ளி தொகுதியில்

## தமிழக வெற்றி கழகம் வேட்பாளர் எஸ்.ஆர்.சம்பங்கி வேட்புமனு தாக்கல்



கிருஷ்ணகிரி ஏப் 5

தமிழக அரசியல் களத்தில் பெரும் எதிர்பார்ப்புகளுக்கு இடையே, கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதியில் தமிழக வெற்றி கழகம் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் எஸ்.ஆர்.சம்பங்கி இன்று தனது வேட்புமனுவைத் தாக்கல் செய்தார்.

வேட்புமனு தாக்கலுக்கு முன்னதாக, சூளகிரி அருகே உள்ள ரவுண்டானாவில் இருந்து ஆயிரக்கணக்கான கட்சித் தொண்டர்கள் மற்றும் பொதுமக்களுடன் உற்சாகமாக ஊர்வலமாக வந்த சம்பங்கி, பின்னர் சூளகிரி வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி. கீதாராணியிடம் தனது மனுவை ஒப்படைத்தார்.

வேட்புமனு தாக்கலுக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய எஸ்.ஆர். சம்பங்கி, தனக்கு போட்டியிட வாய்ப்பளித்த கட்சியின் தலைவர் மற்றும் பொதுச்செயலாளர் செங்கோட்டையன் ஆகியோருக்குத் தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.

வேப்பனஹள்ளி தொகுதியை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதே தனது முதல் இலக்கு என்றும், தொகுதியில் உள்ள அனைத்துப் பிரச்சனைகளையும் ஆய்வு செய்து மக்களுக்குத் தேவையான நன்மைகளைச் செய்யப்போவதாகவும் உறுதி அளித்தார்.

தொகுதி முழுவதும் சுற்றுப்பயணம் செய்தபோது பெரியவர்கள் முதல் இளைஞர்கள் வரை அனைவரும் கட்சிக்கும், தலைவருக்கும் சிறப்பான வரவேற்பு அளிப்பதாகத் தெரிவித்தார். குறிப்பாக பெண்கள் மற்றும் இளைஞர்களின் ஆதரவு தங்களுக்குப் பெரும் பலமாக இருப்பதாகக் குறிப்பிட்டார்.எங்கள்வெற்றிவாய்ப்புமிகவும்பிரகாசமாக உள்ளது. ஒவ்வொரு கிராமத்திலும் மக்கள் அளிக்கும் வரவேற்பைப் பார்க்கும்போதே வேப்பனஹள்ளி தொகுதியில் தமிழக வெற்றி கழகம் நிச்சயம் வெற்றி பெறும் என்ற நம்பிக்கை உள்ளது" என அவர் கூறினார்.எங்கள் கட்சியைப் பொறுத்தவரை எங்களுக்குத் தலைவர் தான் முக்கியம். மற்றவர்கள் அவர்களின் கட்சி சார்பில் போட்டியிடுகிறார்கள், நாங்கள் எங்கள் கொள்கைப் படி போட்டியிடுகிறோம்.திமுக, அதிமுக போன்ற பாரம்பரியக் கட்சிகள் இருந்தாலும், மக்கள் தற்போது ஒரு பெரிய மாற்றத்தை விரும்புவதாகவும், அந்த மாற்றமாகத் தமிழக வெற்றி கழகம் இருக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

வேப்பனஹள்ளி தொகுதியில் நிலவும் குடிநீர் தட்டுப்பாடு, சாலை வசதிகள் மற்றும் வனப்பகுதிகளில் நிலவும் யானைகள் பிரச்சனை போன்றவற்றுக்குத் தான் வெற்றி பெற்ற பிறகு உரிய முறையில் தீர்வு காணப் போவதாக எஸ்.ஆர். சம்பங்கி உறுதியளித்தார்.

### விளாத்திகுளம்

## வேட்புமனு தாக்கல் செய்த திமுக வேட்பாளர் மார்க்கண்டயேன்



விளாத்திகுளம் ஏப்ரல் 05

தூத்துக்குடிமாவட்டம்விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதியில் திமுக சார்பில் போட்டியிடும் மார்கண்டயேன் அமைச்சர் கீதாஜீவன் முன்னிலையில் விளாத்திகுளம் வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலரான உஷாவிடம் வேட்புமனு தாக்கல் செய்தார்.

இதனைத் தொடர்ந்து வேட்புமனுவை தேர்தல் நடத்தும் அலுவலர்கள் பரிசீலனை செய்தனர்.

தற்போதைய விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினரும் விளாத்திகுளம் திமுக வேட்பாளருமான மார்கண்டேயன் 2011ம் ஆண்டு அதிமுக சார்பில் வெற்றி பெற்றார், அதனைத் தொடர்ந்து 2019 நடைபெற்ற இடைத்தேர்தலில் சுயேட்சையாக நின்று தோல்வியுற்றார், மீண்டும் 2021ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் திமுக சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார், தற்போது மீண்டும் 2026 சட்டமன்றத் தேர்தலில் விளாத்திகுளம் சட்டமன்றத்தொகுதி திமுக வேட்பாளராக போட்டியிடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### காணாமல் போன பெண்

## கண்டுபிடித்து உறவினரிடம் ஒப்படைத்த காவல்துறை



திருச்சி, ஏப். 5

திருச்சி மாவட்டம் துவாக்குடி காவல் நிலைய எல்லைக் குட்பட்ட வாழவந்தான் கோட்டை சுகம் கார்டன் பகுதியில் வசிக்கும் பன்னீர்செல்வம் மனைவி சித்ரா என்பவர் துவாக்குடி காவல் நிலையத்தில் திவ்யதர்ஷினி திருவரம்பூர் காட்டூர்பகுதியில் உள்ள உருமு தனலட்சுமி கல்லூரியில் முதலாம் ஆண்டு கணினி அறிவியல் பட்டப்படிப்பு படித்து வந்த நிலையில் ஒரு வருடமாக தஞ்சாவூர் வடக்கு வாசல் பகுதியைச் சேர்ந்த மெய்யரசன் என்பவரை காதலித்து வந்ததாகவும் கடந்த 30.03.2026 ம் தேதி காலை8.45 மணிக்கு கல்லூரிக்கு எப்போதும் போல சென்றவர் கல்லூரி முடித்து மதியம் வீடு திரும்பவில்லை எனவும்,. தனது மகளை காணவில்லை என அவரது தாயார் சித்ரா கொடுத்த புகாரின் அடிப்படையில் துவாக்குடி காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு காணாமல் போன திவ்யதர்ஷினி என்ற பெண்ணை தேடி வந்த நிலையில் அவர் மேற்படி தஞ்சை வடக்கு வாசல் பகுதியைச் சேர்ந்த மெய்யரசு என்பவருடன் திருமணம் ஆகி தலைமறைவாக வசித்து வருவது தெரிந்து அவர்கள் இருவரையும் துவாக்குடி காவல் நிலைய உதவி ஆய்வாளர் நாகராஜ் மற்றும் காவலர்கள் தஞ்சாவூர் வடக்கு வாசல் பகுதியில் தலைமறைவாக இருந்த இருவரையும் பிடித்து காவல் நிலையம் அழைத்து வந்து இரு வீட்டாரையும் அழைத்து விசாரணை மேற்கொண்டு திவ்யதர்ஷினி கல்யாண வயதை எட்டிய நிலையில் சம்மதத்தின் அடிப்படையில் மெய்யரசன் குடும்பத்தாருடன் திவ்யதர்ஷினி என் தாயார் சித்ரா ஒப்புதலுடன் ஒப்படைக்கப்பட்டார்..

### ஈரோடு பெரிய மாரியம்மன் கோவில்

## நில மீட்பு இயக்கம் சார்பில் பெண்கள் தீர்த்த குட ஊர்வலம்




ஈரோடு ஏப் 5

ஈரோடு பெரிய மாரியம்மன் கோவில் நி மீட்பு இயக்கம் சார்பில் நீதிமன்ற தீர்ப்பை அரசு மதிக்க வேண்டும் 80 அடி திட்ட சாலையை திறக்க வேண்டும் அம்மனுக்கு ஆலயம் அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தி ஒவ்வொரு ஆண்டும் ஈரோடு பெரிய மாரியம்மன் கோவில் திருவிழாவை ஒட்டி தீர்த்துக்குட ஊர்வலம் நடந்து வருகிறது.

இதேபோல இந்த ஆண்டும் தீர்த்த குட ஊர்வலம் நடந்தது. ஈரோடு கோட்டை ஈஸ்வரன் கோவில் அருகில் இருந்து புறப்பட்ட இந்த ஊர்வலம் ஈரோடு பெரிய மாரியம்மன் கோவிலை அடைந்தது. அங்கு தீர்த்த குடம் எடுத்து வந்த பெண்கள் கம்பத்திற்கு புனித நீரை அம்மனை வழிபட்டனர்.

இந்த நிகழ்ச்சியை சி கே சரஸ்வதி எம் எம் ஏ தொடங்கி வைத்தார். ஈரோடு பெரிய மாரியம்மன் கோவில் நில மீட்பு இயக்கத் தலைவர் சந்திரசேகர், செயல் தலைவர் கைலாசபதி, துணைத் தலைவர்கள் ராஜேஸ்வரன், தங்கவேல், சிவசுப்ரமணியம், பொருளாளர் ராஜு கண்ணன், பொதுச் செயலாளர்கள் சரவணன், சிவா (எ) பரமசிவம், சட்டக்குழு உறுப்பினர்கள் வழக்கறிஞர்கள் பழனிசாமி, ஈஸ்வரமூர்த்தி, தேவிபிரசாத், சாமிநாதன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

மேலும் இந்து முன்னணி மாவட்ட தலைவர் ஜெகதீசன், அனைத்து வணிக சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர் ராஜமாணிக்கம்,அனைத்து வணிகர் சங்கங்களின் கூட்டமைப்பு செயலாளர் ரவிச்சந்திரன், திருவேங்கட சாமிவீதி சங்க முன்னாள் தலைவர் செந்தில், ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

### தேர்தல் பாதுகாப்பு குறித்து

## தேர்தல் மேற்பார்வையாளர் காவல் துறை நேரில் ஆய்வு



திருப்பூர்:ஏப்05 தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2026 நடைபெறுவதை முன்னிட்டு, திருப்பூர் எல்லைக்குட்பட்ட மாவட்டம் தாராபுரம் உட்கோட்ட காவல் பதற்றமான மேற்கொள்ளப்பட்டுள்ள தேர்தல் வாக்குச்சாவடி மையத்தில் முன்னெச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை திருப்பூர் மாநகர & மாவட்ட தேர்தல் மேற்பார்வையாளர் (காவல் துறை) ராகுல் ஹெக்டே, நேரில் ஆய்வு மேற்கொண்டார். தாராபுரம் உட்கோட்ட துணைக்காவல் கண்காணிப்பாளர் மற்றும் தாராபுரம் காவல் ஆய்வாளர் ஆகியோர் உடனிருந்தனர்.

### விளாத்திகுளம் வட்டாட்சியர் அலுவலகத்தில்

## அதிமுக வேட்பாளர் சத்யா வேட்புமனு தாக்கல்



விளாத்திகுளம் ஏப்ரல் 05.

தூத்துக்குடிமாவட்டம்விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதியில் அதிமுக சார்பில் புதுமுகமாக போட்டியிடும் சத்யா விளாத்திகுளம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்சின்னப்பன்முன்னிலையில் விளாத்திகுளம் வட்டாட்சியர் அலுவலகத்தில்தேர்தல் நடத்தும் அலுவலர் உஷாவிடம்தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார்.

வேட்பு மனுவை தேர்தல் நடத்தும் அலுவலர்கள் பரிசீலனை செய்தனர்.

## எண்ணற்ற திட்டங்களை வழங்கியுள்ளோம். வெற்றியை பரிசாக தாருங்கள்

### மதியழகன் எம்.எல்.ஏ. பேச்சு



கிருஷ்ணகிரி, ஏப். 5

பர்கூர் சட்டசபை தொகுதி, தி.மு.க., வேட்பாளர் மதியழகன் எம்.எல்.ஏ., எருமாம்பட்டி, பாலேகுளி, மாரிசெட்டிஹள்ளி, நெடுங்கல், பெண்ணேஸ்வரமடம், தட்ரஹள்ளி உள்ளிட்ட, 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் பிரசாரம் மேற்கொண்டார். பெண்கள் ஆரத்தி எடுத்தும், செல்பி எடுத்தும் அவரை வரவேற்றனர்.

பாலேகுளியில் தேங்காய் உரிக்கும் பணியில் ஈடுபட்டவர்களுடன் பணியாற்றியவாறு அவர்களிடம் ஓட்டு கேட்டார்.

அப்போது அவர் பேசியதாவது:

கடந்த, 5 ஆண்டுகளில், தி.மு.க., தலைவர் ஸ்டாலின் சிறப்பான ஆட்சியை தந்துள்ளார். அன்புக்கரங்கள் என்ற திட்டம் மூலம் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கும் தாயுள்ளத்தோடு உதவுகிறார். அடுத்த ஆட்சியில் காலை உணவு திட்டம், 8ம் வகுப்பு வரை விரிவுபடுத்தப்படவுள்ளது. 8,000 ரூபாய் கூப்பன் வழங்கப்படவுள்ளது. அதில், மக்கள் தாங்கள் விரும்பும் பொருட்களை வாங்கலாம்.

10 லட்சம் பேருக்கு வீடுகள் கட்டித்தரப்படும் எனவும் அறிவித்துள்ளார். எண்ணற்ற திட்டங்கள் வாக்குறுதிகளாக வழங்கப்பட்டுள்ளது. தி.மு.க., ஆட்சியில் சொல்வதை மட்டும் அல்ல, சொல்லாததையும் செய்து காட்டி உள்ளோம். உங்கள் பகுதியிலேயே புதிய ரேஷன் கடை, துணை சுகாதார நிலையம், பஸ் ஸ்டாப், சாலை வசதிகள் என கேட்டதெல்லாம் எம்.எல்.ஏ.,வாக இருந்து நான் செய்து கொடுத்துள்ளேன்.

எனக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. நான் வெற்றி பெற்று, ஸ்டாலின் மீண்டும் முதல்வராக அமர்ந்தவுடன் மேலும் பல திட்டங்களை செய்வேன். பர்கூர் சட்டசபை தொகுதியில், தி.மு.க., ஆட்சியில் எண்ணற்ற திட்டங்களை வழங்கியதற்கு, வெற்றியை பரிசாக தாருங்கள்.

இவ்வாறு அவர் பேசினார்.

## தொடர்ந்து சோதனைக்கு உட்படுத்தப்படும் முதல்வரின் வாகனம்: தேர்தல் பறக்கும் படை அதிரடி



நாகர்கோவில் ஏப் 05

தமிழக சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு கன்னியாகுமரி மாவட்டத்திற்கு தேர்தல் பரப்புரைக்காக வருகை தந்த தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலினின் வாகனத்தை பறக்கை விலக்கு பகுதியில் அவர் வந்து கொண்டிருந்த போது அங்கு நின்று கொண்டிருந்த தேர்தல் பறக்கும் படையினர் முதலமைச்சர் வாகனத்தை தடுத்து நிறுத்தினர். தொடர்ந்து வாகனத்தை சோதனை செய்ய கேட்டுக் கொண்ட போது முதலமைச்சர் உடனே தனது வாகனத்தை விட்டு இறங்கி சோதனை செய்ய அனுமதி அளித்தார்.



திருப்பூர் தெற்கு சட்டமன்ற தொகுதியில் அனைத்திந்திய புரட்சித்தலைவர் மக்கள் முன்னேற்றக் கழக கூட்டணி கட்சியான அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் தேளிகாளிமுத்து திருப்பூர் மாநகராட்சியில் உள்ள தேர்தல் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் எம்.பி. அமீத் IAS அவர்களிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

# நாகர்கோவிலில் ஸ்டாலின் பேட்டி

நாகர்கோவில், ஏப். 5

நாகர்கோவிலில் நடந்த பிரச்சார கூட்டத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஆறு தொகுதி வேட்பாளர்களைஆதரித்துமுதலமைச்சர்மு.க.ஸ்டாலின் பிரச்சாரம் செய்தார். இதை தொடர்ந்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார் அப்போது அவர் கூறியதாவது:

கேள்வி: உங்களுடைய இல்லத்தரசி கூப்பன் அறிவிப்பிற்கு மக்கள் வரவேற்பு எப்படி இருக்கு?"

பதில்: "ரொம்ப பிரமாதமா இருக்கு. திமுக தேர்தல் வாக்குறுதியில் இல்லத்தரசி திட்டம் மக்கள் மத்தியில் மிகப்பெரிய வரவேற்பு பெற்றுள்ளது"

கேள்வி: "தொடர்ந்து எதிர்க்கட்சிகள்... அதாவது நீங்க பெரும்பாலானதொகுதியிலஜெயிக்கமாட்டீங்க,அவங்க கனவு தான் காணுறாங்கன்ற மாதிரி சொல்றாங்க அதை பத்தி என்ன நினைக்கிறீங்க?"

பதில்: " அதனால தான், தோல்வி பயத்தில் உள்ள எடப்பாடி பழனிச்சாமி இப்போது தரக்குறைவா பேசி வருகிறார்,." இவ்வாறு அவர் கூறினார்

## ஈத்தாமொழி அருகே

# கோயில் பூசாரியை தாக்கி கால்வாயில் வீச்சு; 6 பேர் மீது வழக்கு

நாகர்கோவில், ஏப்.5

நாகர்கோவில்வடசேரிபகுதியைசேர்ந்தவர்ஈசானசிவம் என்றராஜா(32).கோவில்பூசாரியாகஉள்ளார்.இவருக்கும் நாகர்கோவில்சைமன்தெருவைசேர்ந்தபிரபலரவுடியான ராஜன் என்ற சந்தை ராஜன் (45) என்பவருக்குமிடையே தகராறு ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக ஈசான சிவம் இரணியல் போலீசில் புகார் செய்து, சந்தை ராஜன் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. இதனால் ஈசான சிவம் மீது சந்தை ராஜன் ஆத்திரத்தில் இருந்துள்ளார்.

இந்த நிலையில் சந்தை ராஜன் தனது கூட்டாளியான லிங்கராஜா (43) என்பவர் உதவியுடன் ஈசான சிவத்தை சமரசம் பேச வருமாறு அழைத்துள்ளார். இதனை நம்பி ஈசான சிவம் நங்கூரான் பிலா விளை என்ற பகுதிக்கு சென்றுள்ளார். அவரை ரவுடிகள் இருவரும் தென்னந்தோப்புக்குள் பேச்சுவார்த்தைக்கு அழைத்து சென்றுள்ளனர். அங்கு மேலும் ஜிம் கண்ணன் (45), ஐயப்பன், அஜித் மற்றும் கண்டால் தெரியும் சிலர் அங்கு நின்றுள்ளனர்.

பின்னர்அவர்கள்சந்தைராஜன்மீதுஇரணியல்போலீஸ் நிலையத்தில் பதிந்த வழக்கை வாபஸ் கேட்டு ஈசான சிவத்தை மிரட்டி உள்ளனர். அவர் மறுத்ததால் ஆத்திரமடைந்த சந்தை ராஜன் தனது கூட்டாளியுடன் சேர்ந்து இரும்பு கம்பியால் அவரை தாக்கி கொலை மிரட்டல் விடுத்துள்ளனர்.

இதில் படுகாயம் அடைந்த ஈசான சிவத்தை தூக்கி சென்று அந்த பகுதியாக செல்லும் கால்வாயில் உள்ள பள்ளத்தில் வீசிவிட்டு சென்றுள்ளனர். அக்கம் பக்கத்தினர் மீட்டு குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை அனுப்பி வைத்தனர். இது குறித்த புகாரின் பேரில் ஈத்தாமொழி போலீசார் சந்தை ராஜன், காட்டு ராஜா, ஜிம் கண்ணன், ஐயப்பன், அஜித் உள்ளிட்ட 6 பேர் மீது வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். இதில் சந்தை ராஜன், ஜிம் கண்ணன் ஆகியோர் போலீஸ் சரித்திர பதிவேட்டில் ஏ ப்ளஸ் பிரிவு ரவுடிகளாகவும், காட்டுராஜா சி பிரிவு ரவுடியாகவும் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வெள்ளிச்சந்தை அருகே

# கள்ளக்காதல் தகராறு 2 பேருக்கு கத்தி குத்து

குளச்சல், ஏப்.5

நாகர்கோவில் அருகே அனந்த நாடார் குடியிருப்பு பகுதியை சேர்ந்தவர் ஜெகன் (27). கூலி தொழிலாளி. இவரது மனைவிக்கும் வெள்ள மோடி பகுதியை சேர்ந்த லிங்கேஷ் (25) என்பவருக்கும் தராத உறவு இருந்து வந்ததாக கூறப்படுகிறது. இதை அறிந்த ஜெகன் தனது மனைவியையும் லிங்கேஷையும் கண்டித்துள்ளார். இதனால் ஜெகன் மீது லிங்கேஷுக்கு முன் விரோதம் இருந்து வந்துள்ளது.

இந்த நிலையில் லிங்கேஷ், ஜெகனை அழைத்து பேச்சுவார்த்தைக்கு வருமாறு வெள்ளமோடிக்கு அழைத்துள்ளார். இதனால் ஜெகன் ராமன் புதூரை சேர்ந்த ராஜ்குமார் என்பவர் உடன் வெள்ளமோடிக்கு சென்றார். அப்போது அங்கு நடந்த பேச்சுவார்த்தையின் போது வாய் தகராறு வேறுபட்டு, ஆத்திரமடைந்த லிங்கேஷ் தான் மறைத்து வைத்திருந்த கத்தியால் ஜெகனை குத்தினார். இதை தடுக்க சென்ற ராஜகுமாருக்கும் கத்தி குத்து விழுந்தது. இதில் படுகாயம் அடைந்த ஜெகன் மற்றும் ராஜகுமாரை அக்கம் பக்கத்தினர் மீட்டு குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இது குறித்த புகாரின் பேரில் வெள்ளிச்சந்தை போலீசார் லிங்கேஷ் மீது வழக்கு பதிவு செய்து அவரை தேடி வருகின்றனர்.

## சமூக நல அமைப்புகள் சார்பில்

# உடுமலை சட்டமன்ற தொகுதி சுயேட்சை வேட்பாளர் சா. காளிமுத்து வேட்பு மனு

திருப்பூர் ஏப்:05

தமிழ்நாடு சமூக ஆர்வலர்கள் கூட்டமைப்பு, தமிழ் உணர்வாளர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் நல சங்கம் சார்பில் உடுமலை சட்டமன்ற தொகுதி சுயேட்சை வேட்பாளராக சா. காளிமுத்து வேட்பு மனு வழங்கினார். இது குறித்து பத்திரிகையாளரிடம் வேட்பாளர் கூறுகையில்: உடுமலை சட்டமன்ற தொகுதியில் நான் எந்த ஒரு கட்சி சாராமல் சுயேட்சை வேட்பாளராக களம் காண்கிறேன்.

குறிப்பாக மாற்றுத்திறனாளிகளுக்கு அரசு பல சலுகைகள் வழங்கினாலும் இன்னும் பல இடங்களில் அவர்களுக்கு வாய்ப்பு அளிப்பதில்லை தேர்தல் பரப்புரையில் கூட அவர்களை பயன்படுத்துவதில்லை எனவே இந்த தேர்தலில் எனக்கு மாற்றுத் திறனாளிகள் பரப்புரையில் ஈடுபட உள்ளனர்.

பொதுமக்களுக்கு அந்தந்த பகுதிகளில் என்ன தேவையோ அதை பொதுமக்களிடமே கேட்டு பொது மக்கள் மத்தியிலே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தி தீர்வு காண உள்ளோம்.

விவசாயிகள் தங்களின் விளைநிலங்களில் விளையும் பொருட்களுக்கு அதிகபட்ச ஆதார விலையை அவர்களே நிர்ணயம் செய்து நேரடியாக சந்தைப்படுத்துவதற்கான கொள்முதல் மையம் அமைக்கப்பட உள்ளோம். தேர்தல் திருவிழாவில் தினம் ஒரு கலை நிகழ்ச்சிகள் அரங்கேற உள்ளோம் இது போன்ற பல்வேறு திட்டங்களை இந்த தேர்தலில் மக்கள் மத்தியிலே எடுத்துச் செல்ல உள்ளோம் என கூறினார்.



சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிட ஆதிராஜாராம் வேட்புமனு அளித்தார். அப்போது பெசண்ட் சாலையில் ஆயிரக்கணக்கான மக்களுடன் ஊர்வலமாக சென்ற காட்சி.



திருச்சிகிழக்குசட்டமன்றதொகுதியில்போட்டியிடும்அதிமுகவேட்பாளர்பொறியாளர் கா. ராஜசேகரன் அரியமங்கலம் கோட்ட அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் முருகேச பாண்டியனிடம் வேட்பு மனுவை தாக்கல் செய்தார். அருகில் மாநகர் மாவட்ட கழக செயலாளர் முன்னாள் துணை மேயர் ஜெ.சீனிவாசன், கழக அமைப்புச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமானவெல்லமண்டி நடராஜன், பாஜக மாவட்ட தலைவர் ஒண்டிமுத்து, அமமுக மாவட்ட செயலாளர் செந்தில்நாதன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

## திருவெறும்பூர் தொகுதியில்

# மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி வேட்பாளர் அன்பில் மகேஸ்பொய்யாமொழி வேட்பு மனு தாக்கல்



திருவெறும்பூர் ஏப் 4

திருவெறும்பூர் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் திமுக வேட்பாளரானஅன்பில்மகேஸ்பொய்யா மொழிநேற்றுதாக்கல்செய்வதற்காகபெல் தொமுச தொழிற்சங்க அலுவலகத்தில் இருந்து கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன் மேளதாளங்கள் முழங்க வான வேடிக்கைகளுடன்கரகாட்டம்பொம்மை ஆட்டம் மற்றும் தாரை தப்பட்டைகள் முழங்க ஊர்வலமாக வருகை புரிந்தார், அப்பொழுது அவருக்கு தொண்டர்கள் வேல் கொடுத்து வழி நெடுகிலும் மலர் தூவி உற்சாக வரவேற்பளித்தனர் மேலும் இதனை அடுத்து திருவெறும்பூர் பகுதி திமுக இளைஞரணி சார்பில் கிரேன் மூலம் மாலை அணிவித்தனர்.

அதன் பிறகு அன்பில் மகேஸ்பொய்யாமொழி கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன்திருவெறும்பூர்தாலுக்கா அலுவலகத்திற்கு வந்து தனது வேட்பு மனுவை திருவெறும்பூர் தேர்தல் நடத்தும் அலுவலரான அமுதாவிடம் வழங்கினார்.

மேலும்இந்த விழாவில் திருச்சி எம்.பி. துரைவைகோ, மண்டலம் மூன்றின் தலைவர்மதிவாணன்இந்தியகம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் ராஜ்குமார் விடுதலை சிறுத்தைகள் கட்சி நிர்வாகி திலீபன் ரமேஷ்தேமுதிக நிர்வாகி டிவி கணேஷ் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் என பல ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர

# நாகர்கோவில் மாநகரில் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு மற்றும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உறுதி

## தவெக வேட்பாளர் பெர்வின் கிங்ஸ் பேட்டி



நாகர்கோவில்,ஏப்.05

தமிழக வெற்றி கழகம் சார்பில் நாகர்கோவில் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர் பெர்வின் கிங்ஸ் நாகர்கோவில் கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேற்று நாகர்கோவில் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் காளீஸ்வரியிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார்.



இதைத்தொடர்ந்து அவர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது கூறியதாவது:

நாகர்கோவில் மாநகரில் தண்ணீர் பிரச்சினை தீராத பிரச்சினையாக இருந்து வருகிறது. கோடைகாலங்களில் பத்து நாட்களுக்கு ஒரு முறை தான் தண்ணீர் வினியோகம் செய்யப்படுகிறது. இதனால் ஏழை எளிய மக்கள் அவதிப்பட்டு வருகிறார்கள். எனவே தேர்தலில் நான் வெற்றி பெற்றால் நாகர்கோவில் மாநகரில் குடிநீர் பிரச்சனையை தீர்க்க நடவடிக்கை எடுப்பேன். இதே போல மாநகர இளைஞர்கள் பலரும் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். ஊழல் இல்லாத ஆட்சியை கொண்டுவர வேண்டும் என்று தான் த.வெ.க. தலைவர் விஜய் கூறியிருக்கிறார். அவரது அறிவுறுத்தலின் படி ஊழல் இல்லாத ஆட்சியை கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும். நாகர்கோவில் புத்தேரியில் கடந்த சில நாட்களுக்கு முன்பு மூதாட்டி ஒருவர் பலாத்காரம் செய்யப்பட்டார். இதே போல பல சட்ட ஒழுங்கு பிரச்சினைகள் நடந்து வருகின்றன. இதையெல்லாம் சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். அனைத்து மக்களும் எந்த நேரத்திலும் வெளியே செல்லும் வகையில் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும். பெரிய பெரிய தலைவர்களை எதிர்த்து நான் போட்டியிடுகிறேன். அந்த தலைவர்கள் இதுவரை மக்களுக்கு எதையும் செய்யவில்லை. கடந்த ஐந்து ஆண்டுகால ஆட்சியில் இங்கு உள்ள எம்எல்ஏவும் சரி, அமைச்சரும் சரி எந்த விதமான வளர்ச்சி பணிகளையும் கொண்டு வரவில்லை. வாக்குறுதி மட்டும் கொடுக்கிறார்கள். அதை நிறைவேற்றுவதில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

## திருச்சி பெரியார் மாளிகையில்

# திராவிடர் கழக நிருவாகிகளிடம் மேற்குத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் கே.என்.நேரு ஆதரவு திரட்டினார்



திருச்சி, ஏப். 5

திருச்சி பெரியார் திராவிடர் கழக நிருவாகிகளிடம் மேற்குத் தொகுதி திமுகவேட்பாளர்கே.என்.நேருஆதரவு திரட்டினார்

தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தல் வரும் 23 ஆம் தேதி நடைபெறவுள்ளது. திருச்சி மேற்குத் தொகுதி தி.மு.க. வேட்பாளரும்,முதன்மைச்செயலாளருமான கே.என். நேரு தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறார்.

அதன் ஒரு பகுதியாக திருச்சி புத்தூர் பெரியார் மாளிகையில் உள்ள மாவட்ட திராவிடர் கழக அலுவல கத்தில் நேற்று மாலை 7 மணி யளவில் திருச்சி மேற்கு தொகுதி வேட்பாளரும் நகராட்சிநிர்வாகதுறை அமைச்சருமான கே.என். நேரு கழக தோழர்கள் மற்றும் நிர்வாகிகளை சந்தித்துவாக்கு சேகரித்தார் வருகை தந்த அமைச்சர் கேஎன்.நேருவுக்கு மாவட்ட திராவிடர் கழகத்தலைவர் ஞா. ஆரோக்கிய ராஜ் மாநில தொழிலாளர் அணி செயலாளர் மு.சேகர். தகவல் தொழில் நுட்ப குழு மாநில ஒருங்கிணைப்பாளர் வி.சி வில்வம். பெரியார் வீரவிளையாட்டுகழக மாநிலத்தலைவர் பேராசிரியர் ப. சுப்ரமணியன் பெரியார் மாளிகை தங்கத்தாள் ஆகி யோர் பயனாடை அணிவித்து வரவேற்றனர். இதில் மாவட்டசெயலாளர் மகாமணி மாநில மாணவரணி துணை செயலாளர் அறிவுச்சுடர் பெரியார் பெருந்தொண்டர் ஆசிரியர் நற்குணம், (திருச்சி மாவட்ட மகளிர் அணி தலைவர் ரெஜினா பால்ராஜ். திருச்சி மாவட்ட மகளிர் பாசறை தலைவர் ரூபியா ஸ்டாலின், திருச்சி மாவட்ட மகளிர் அணி சாந்தி சுரேஷ் ஆண்டிராஜ் திருவரம்பூர்ஒன்றிய செயலாளர் சங்கிலி முத்து. களகராஜ், கல்பாக்கம்.

ராமச்சந்திரன், பெல் ஆறு முகம், கங்காதரன், லோக நாதன் குணா, முருகன், விஜய ராகவன்.திருநாவுக்கரசு வெற்றி மணி, விஜயா மாரியப்பன். புனிதா,அன்புச்செல்வன். மற்றும் திக நிர்வாகிகள் தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## கோவளம் மீனவ கிராமத்தில்

# நடைபயிற்சியில் வாக்கு சேகரித்த மு.க.ஸ்டாலின்; மக்கள் உற்சாகம்



கன்னியாகுமரி, ஏப்.5

கன்னியாகுமரி மாவட்டத்தில் திமுக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் செய்வதற்காக நேற்று முன்தினம் இரவு திருநெல்வேலியில் இருந்து கார் மூலம் தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் கன்னியாகுமரி வந்தார். அங்கு தனியார் விடுதியில் தங்கியவர் நேற்று காலை 7 மணி அளவில் கன்னியாகுமரி கோவளம் ஊராட்சி கடற்கரை சாலையில் நடைபயிற்சி மேற்கொண்டு வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

அப்போது கோவளம் மீனவ கிராமத்திற்கு சென்ற முதலமைச்சர் அங்கு ஆண்கள், பெண்கள், முதியவர்கள் என்று அனைத்து தரப்பு மக்களை நேரில் சந்தித்து வாக்கு சேகரித்தார். முதலமைச்சர் வந்திருப்பது அறிந்த பொதுமக்கள், பெண்கள் உள்ளிட்டோர் வீட்டில் இருந்து வெளியே ஆர்வத்துடன் ஓடி வந்து அவருக்கு கை கொடுத்து தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.

பின்னர் தங்களது கோரிக்கைகளையும் கூறினார்கள். இதில் பெரும்பாலான மீனவ மக்கள் கோவளத்தில் அமைந்துள்ளதூண்டில் வளைவு சிறிய அளவில் இருப்பதால் சீசன் காலங்களில் கடல் சீற்றம் அதிகமாகும் போது பிரச்சனை ஏற்படுகிறது. எனவே இதை நீட்டித்து தர வேண்டும் என என்ற கோரிக்கையை வைத்தார்கள். மேலும் கோவளம் ஊராட்சியை கன்னியாகுமரி நகராட்சியுடன் இணைக்க கூடாது எனவும் கோரிக்கை வைத்தனர். மக்கள் கோரிக்கைகளை கேட்டு அவர் இது குறித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என கூறினார்.

சுமார் ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் முதல்வர் ஸ்டாலின் நடைபயிற்சி சென்றார். இந்த வாக்கு சேகரிப்பின் போது வேட்பாளர் மகேஷ், கன்னியாகுமரி நகராட்சி தலைவர் குமரி ஸ்டீபன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

## பர்கூர் வட்டாட்சியர் அலுவலகத்தில்

# அதிமுக வேட்பாளர் இ.சி கோவிந்தராசன் வேட்புமனு தாக்கல்



கிருஷ்ணகிரி, ஏப். 5

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் பர்கூர் சட்டமன்ற தொகுதி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்

இ.சி கோவிந்தராசன் தேர்தல் விதிமுறைக்கு உட்பட்டு தனது வேட்புமனுவை தேர்தல் நடத்தும் அலுவலர் அபிநயா அவர்களிடம் வழங்கினார். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சி.வி ராஜேந்திரன், ஒன்றிய செயலாளர்கள் கிருஷ்ணன், திருமால், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் எஸ்.எம் மாதையன், பா.ஜ.க மாவட்ட தலைவர் கவியரசு, முன்னாள் மாவட்ட தலைவர் சிவப்பிரகாசம், நாகோஜனஹள்ளி பேரூர் கழக செயலாளர் அண்ணாதுரை, ஒன்றிய பொருளாளர் பழனி உள்ளிட்ட அனைத்து கூட்டணி கட்சி கழக நிர்வாகிகள் இழந்து கொண்டனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.